மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நண்டலாற்றின் வரலாற்றையே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை. எனினும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏதேனும் அத்தகைய பணிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பின் அவை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் ரெகுலேட்டர் அமைத்தல்.

698—(*வினா எண். 4573.) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டம் முடிகொண்டான் ஆற்றில் சன்னாநல்லூர் அருகில் ரெகுலேட்டர் அமைத்து நெடுஞ்சேரியிலிருந்து குனாண்டிதரிசி வெளி வரை பாசன வசதியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நசுவினியாற்றை ஆழப்படுத்தல்.

699—(*வினா எண். 8910) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில், நசுவினியாறு, கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி. மீட்டர் தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள பகுதிகளில் ஆற்றைச் சுற்றிலும் காடுகள்

பல வகையான காடுகள், மங்கனங்காடு, ராசீயங்காடு, தந்தர நாயகிபுரம் காடு, கருங்குளம் காடு, கரிசக்காடு, முழுக்குக்காடு, அதிராம்பட்டினம், மழவேனில்காடு போன்ற காடுகள் அடர்த்தியாக இருந்து கொண்டு, இந்த ஆற்றின் நீர் கடலில் சென்று கலக்க விடாமல் தடுக்கிறது. அதனால் அந்தப்பகுதியில் உள்ள மக்களுக்கு விவசாயம் செய்ய முடியாமல் சிரமமாக இருக்கிறது. பயிர்கள் அழிந்துவிடுகின்றன. மழைக்காலங்களில் அந்தப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டு, வெள்ளத்திலிருந்து வெளியே வர முடியாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அந்தக் காடுகளை நீக்க வேண்டும் என்று நாங்கள் கலெக்டரிடம் மனு கூட கொடுத்தோம். அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ள 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒதுக்கிய தொகையில் 4½ லட்சம் ரூபாய்தான் புல்டோசர்களுக்காக கொடுக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டது. மீதம் உள்ள 4½ லட்சம் ரூபாயையும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வியைப் பொறுத்தவரையிலும் நசுவினியாறு கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி.மீ. தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்துவதைப் பற்றியதாகும். காடுகள் வளர்வது என்பது இயற்கையான ஒன்றாகும். அவ்வாறு காடுகள் அமைவது சுற்றுப்புற சூழலை, சீதோஷ்ணத்தை சம நிலையில் பாதுகாக்க உதவுகிறது. ஆகவே அந்த நிலையில் காடுகளை அழிக்க வேண்டுமென்றால் சுற்றுப்புற சூழல் துறையின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையில் இந்தத் துறை இருக்கிறது. அந்த முறையில் அதற்கான ஒப்புதலைப் பெற்றால் தான் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் காடுகளை முழுமையாக அழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்தில் சுமார் 2 கி.மீ. தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை 50 அடி அகலத்திற்கு அகற்றுவதற்கு அனுமதியை வனத்துறையிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒதுக்கப்பட்ட பணத்தில் பாதியை நிறுத்திவிட்டார்கள். அதையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :—தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக, சுற்றுப்புறச் சூழல் துறை மூலமாக ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடு படும். நிதி ஒதுக்கீட்டை பொறுத்தவரையிலும் ஒட்டு மொத்தமாக அந்தப் பகுதிக்கு, தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப் படுகிற நிதி, அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அத்தனைபேரும் சேர்ந்து அந்தந்த பணிகளுக்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்கிறார்கள். அப்படி ஒதுக்கீடு செய்கிறபோது சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவார்களேயானால் அதனை அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். தேவைப்பட்டால் அரசு இதில் தலையிடும்.

கிண்டியிலுள்ள காமராஜர் நினைவாலயம்

கு.கா.வினா எண் 10—(*வினா எண். 9139) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினை வாலயம் சரிவர பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) கிண்டியிலுள்ள காமராஜ் நினைவாலயம் பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்ற 13–4–1986ஆம் நாளன்று எங்கள் கட்சியின் மாநிலத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. இரா. செழியன் அவர்கள் கிண்டியிலுள்ள காம ராஜர் நினைவாலயத்திற்கு மலர் வளையம் வைக்கச் சென்றிருந்த போது நினைவாலயத்தின் முன்னாலே இருந்த கேட் உடைந்து போன நிலையில் இருந்தது. புல்வெளிகள் காய்ந்து போயிருந் தன. அங்கே எந்தவிதமான பராமரிப்பும் இல்லை. நினை வாலயம் ஒட்டடை அடைந்து போய் கவனிக்கப்படாத நிலையில் இருந்தது. இந்த நிலை குறித்து ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் தபால் மூலமாக மாண்புமிகு அறநிலையத் துறை